குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1
சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | ஜெயராமன் த–பெ அய்யாக்கண்ணு | நாள்:14.09.2022 |
| வயது | | PW 5 |
| தொழில் | | STC:53/2018 |
| காவல் நிலையம் | | Cr.No.216/2017 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 14.09.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழ்அனுவம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டு சாட்சி கையொப்பங்களில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள் தான். அவர்கள் எனக்கு நெடுநாள் பழக்கம். இந்த வழக்கின் விசாரணைக்காக சம்பவயிடத்தில் 26.08.2017 அன்று 14.30 மணிக்கு கிள்ளை காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரணை செய்ததாகவும் தாங்கள் தயார் செய்யவிருக்கும் பார்வை மகசருக்கு சாட்சிகளாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க நானும் மகாலிங்கம் என்பவரும் சம்மதிக்கவே எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தில் வைத்து போலீசார் தயார் செய்த பார்வை மகசரில் நானும் மகாலிங்கமும் சாட்சி கையொப்பம் இட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் என் ஊாக்காரர் என்ற காரணத்தினாலும் எதிரிகள் எனக்கு நெடுநாள் பழக்கம் என்ற காரணத்தினாலும் எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியில்லை.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/- Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram